# உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினம் (WTISD) 2021
# தலைவரின் செய்தி

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினத்தை (WTISD) 2021 கொண்டாடுவதற்காக இலங்கை சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) அனைத்து உறுப்பினர்களுடனும் ஒன்றிணைகின்ற இந்த சிறப்பு சந்தர்ப்பத்தில் இந்த செய்தியை அனுப்புவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) அனைத்து உறுப்பு நாடுகளுடனும் சேர்ந்து தங்கள் பங்களிப்புகளை வழங்கவும், “சவாலான காலங்களில் டிஜிட்டல் உருமாற்றத்தை துரிதப்படுத்தல்” என்ற இந்த ஆண்டின் கருப்பொருளின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அழைக்கப்படுகிறது.

முன்னெப்போதையும் விட இன்று, பங்காளர்களுக்கான சேவை வழங்கலில் வணிகங்களின் டிஜிட்டல் மாற்றம் மற்றும் கூட்டாண்மை என்பது எந்தவொரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் முக்கியமான விடயமொன்று என்பது கட்டாயமாகும். நாளாந்த வாழ்க்கையில் இணைய தள விடயங்கள் 5ஜீ, க்லவுட் கொம்பியுடிங், செயற்கை புலனாய்வுகள் (AI) முதலியன போன்ற புதிய தொழில்நுட்பங்களில் துரிதமான முன்னேற்றங்களை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கொண்டுள்ளன. டிஜிடல் புத்தாக்கங்கள் மற்றும் பயனாளர் சமூகத்தின் என்றும் இல்லாதது போல் அதிகரித்துவரும் தேவைகள் மூலம் இந்த மாற்றங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு இந்த தகவல் தொடர்பாடல் முன்னேற்றங்களை தழுவிக் கொள்வதற்கு நாடுகள், நகரங்கள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்கள் வேண்டப்படுகின்றன.

இடம்பெறுகின்ற துரிதமான தொழில்நுட்ப மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையாதவரை நாடொன்று முன்னேற்றமடைய இயலாது. கூறப்பட்ட பிரகாரம், வர்த்தக வசதியளிப்புக்கள், இ- பொருளாதாரம், இ- வர்த்தகம், பூகோள போட்டித்தன்மை, வித்தியாசமான கைத்தொழில்கள் மற்றும் சூழல் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் டிஜிடல் மாற்றங்கள் தொடர்பாக உபாயங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை குறிப்பிட்டுக் காட்டுகின்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுப்புக்களை செய்துள்ளன.

கொவிட் – 19 தொற்றுநோய் வெளிப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் டிஜிடல் மாற்றம் பிரதான தலைப்பாக உருவெடுத்துள்ளது. இந்த கடினமான வேளையில், நாட்டின் அதிகமான தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் ஊடாக தங்களுடைய வியாபாரங்களை மறுசீரமைத்துள்ளன. தற்பொழுது, என்றும் செயற்படுகின்ற சமூகத்தில் முன்னேற்றத்திற்கு எமது தனிப்பட்ட மற்றும் தொழில்நிபுனத்துவ நிகழ்வுகளுக்கு தீர்க்கமானதொரு விடயமாக டிஜிடல் மாற்றம் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. எனவே, சவால்மிகு நேரங்களின் போது விசேடமாக நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த முடியுமான ஒரே தேர்வொன்றாக டிஜிடல் மாற்றம் தொடர்பான முன்னெடுப்பு முக்கியப்படுத்திக் காட்டப்படுகின்றது.

அர்த்தமிகு உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினமொன்று தொடர்பில் சகல பங்களார்களுக்கும் வாழ்த்துவதற்கு இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

**ஜயந்த த சில்வா**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர்.**